21.01.2026 Mcop 381/2021 எ.ம.சா 2 முத்துக்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

களப்பணியாளர் சேகரித்த ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மற்ற ஆவணங்களின் படியும் சாட்சியம் அளிக்கிறேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் மோட்டார் வாகன சட்டபிரிவு 166க்கு எதிராக மனுதாக்கல் செய்துள்ளதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது கொரோணா பெருந்தொற்று காலங்களில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த பெருந்தொற்று காரணமாக மத்திய அரசு மோட்டார் வாகன சட்டத்தில் சில சலுகைகள் வழங்கியிருந்தது என்றால் எங்களுக்கு பொருந்தாது. மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்தின் முந்தைய பாலிசி எங்கள் நிறுவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது. மனுதாரர் அமர்ந்து விஜயன் ஒட்டிசென்ற நிலையில் அந்த விஜயனுக்கு ஒட்டுனர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விஜயனுக்கும், மனுதாரர் கவிதாவிற்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விஜயன் ஒட்டி சென்ற வாகனம் சட்டத்திற்கு புறம்பாக ஒட்டியதாக முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. விஜயன் அவரது வாகனத்திற்கு காப்பீடு சான்று ஏற்கனவே எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது பொருந்தும் என்றால் சரியல்ல. மனுதாருக்கு இழப்பீடு எங்களது நிறுவனம் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,<br>
கூடுதல் சார்பு நீதிபதி,<br>
தென்காசி.